பக்கங்கள் 16+5

மாலை முரசு

## விமலுக்கும் அழைப்பாணை



இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல் களைப் புலனாய்வு செய் வதற்கான 02

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 17 செவ்வாய்க்கிழமை 01.07.2025 | அதிர்வு 332

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அநுர அரசுக்கு ஏமாற்றே மிச்சம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்




“அநுர தலைமையிலான திசைகாட்டி அரசு வாக்குறுதிகளை மீறித் தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றி வருகின்றது. தற்போது இந்த அரசுக்கு ஏமாற்றே மிஞ்சிப் போயுள்ளது.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இன்று விசேட கூற்றை முன்வைத்து கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பலவீனமான, வினைதிறனற்ற, பொய் சொல்லும், ஏமாற்றும் தற்போதைய அரசு நாட்டு மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவித்து வருகின்றது. நேற்று திடீரென எரிபொருள்களில் விலை அதிகரிப்பைச் செய்தது. 02



# வீடு புகுந்து இரு இளைஞர்களை கடத்திச் சென்று துப்பாக்கிச்சூடு!

## ஒருவர் மரணம்; மற்றையவர் படுகாயம்

இரத்தினபுரி மாவட்டம், கஹவத்த, யாயின்ன பகுதியில் நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கஹவத்த, யாயின்ன பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்று இரவு 9 மணியளவில் புகுந்த இனந்தெரியாத நால்வர், இளைஞர்கள் இருவரை ஜீப் வாகனத்தில் கொஸ்கெல்ல பிரதேசத்துக்குக் கடத்திச் சென்று அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். 02



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# சிங்கள இனத்துக்கே இங்கு அநீதி இழைப்பு

## இப்படிக் கூறுகின்றார் வீரசேகர

இலங்கையில் சிங்கள இனத்துக்கே அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது எனவும், தமிழ்ப் மட்டுமே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்துள்ளார் எனவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை விஜயம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை என்பது சிங்கள, பௌத்த நாடாக இருந்த போதிலும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கே அநீதி இழைக்கப்படுகின்றது.

வடக்கில் 25 ஆயிரம் வரையிலான சிங்களக் குடும்பங்கள் இருந்தன. இன்று ஒருவர்கூட இல்லை. மட்டக்களப்பிலும் சிங்களவர்கள் இல்லை.

கொழும்பில் முஸ்லிம் மற்றும் தமிழர்களே வர்த்தகத்தை நிர்ணயிக்கின்றனர். இதற்குச் சிங்களவர்கள் தடை ஏற்படுத்துவதில்லை. நிலைமை இப்படி இருந்தும் சிங்களவர்களுக்கே இனவாத முத்திரைக் குத்தப்படுகின்றது.

அதிகாரத்துக்காகத் தற்போதைய அரசு பெரும்பான்மை இனத்தைக் காட்டிக்கொடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இராணுவ அமைப்பு மற்றும் தேசியவாத அமைப்புகளுடன் சந்திப்பு நடத்தவில்லை. தமிழ்ப் பிரவினைவாதிகளை மட்டுமே சந்தித்தார். இரு தரப்புகள் இருப்பதை அரசு அவருக்குச் சுட்டிக்காட்டி இருக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை." - என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

### அநுர அரசுக்கு...

எரிபொருள் விலையை அதிகரித்த தற்போதைய அரசு, கடந்த தேர்தல் காலங்களில் ஏலவே காணப்படும் எரிபொருள் விலைச்சூத்திரத்தை மாற்றுவோம் எனக் கூறியது. போதாக்குறைக்கு துறைமுகத்தில் இறக்கப்படும் எரிபொருளை அதே விலையில் நுகர்வோருக்கு பெற்றுத் தருவோம் என உரக்கத் தெரிவித்தது. துறைமுகத்தில் ஒரு விலைக்கு இறக்கப்படுகின்றது. பின்னர் பொதுமக்களுக்கு மற்றொரு விலையில் விற்கப்படுகின்றது. ஊழல், மோசடி, திருட்டு மற்றும் இலஞ்சம் போன்றனவையே இதற்குக் காரணம். இவை அனைத்தையும் நிறுத்துவோம், எரிபொருள் மீதான வரிகளை நீக்குவோம். துறைமுகத்தில் இறக்கப்படும் அதே விலையில் எரிபொருளை மக்களுக்கு பெற்றுத் தருவோம் எனத் தற்போதைய ஆளும் தரப்பினர் வாக்குறுதியளித்திருந்தனர். ஆனால், தெளிவான அதிகாரத்தோடு ஆட்சிக்கு வந்த தற்போதைய ஆளும் தரப்பினரால் இன்றளவில் இதில் எதுவும் நடக்கவில்லை.

அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் கொமிஸ் எடுத்தல் நிறுத்தப்பட்டுள்ளனவா? எரிபொருள்கள் மீதான வரிச்சுமைகள் நீக்கப்பட்டுள்ளனவா? என்பன குறித்து நாம் இந்த அரசிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

துறைமுகத்தில் இறக்கப்படும் அதே விலையில் நுகர்வோருக்கு தற்போது எரிபொருள் வழங்கப்படுகின்றனவா என்பது குறித்தும் நாம் இந்த அரசிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

ஐ.எம்.எவ்வின் 4 ஆவது தவணையைப் பெறுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவே இந்த அரசு இவ்வாறு செயற்பட்டு வருகின்றது.

எரிபொருள் விலைச் சூத்திரத்தை மாற்றி அதை மேலும் மக்களுக்கு சாதகமான ஒன்றாக மாற்றியமைப்போம் என்று பிரஸ்தாபித்தவர்கள் இன்றும் கூட முந்தைய அரசின் எரிபொருள் விலை சூத்திரத்தையே பின்பற்றுகின்றார்கள். எரிபொருள் விலையேற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையை நாம் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்குத் தற்போது தட்டுப்பாடு நிலவுகின்றன. உயிர்களைக் காக்கத் தேவையான உபகரணங்கள் போதுமானதாக இல்லை என்று இதற்கு முன்னர் பல தடவை எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியது. சில உபகரணங்கள் பழுதடைந்துள்ளன. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காணப்படும் எம். ஆர். ஐ. ஸ்கேனிங் இயந்திரம் தற்போது செயலிழந்துள்ளது. நோய்வாய்ப்பட்டவர்கள் இந்தப் பரிசோதனை நடவடிக்கையை வெளியில் செய்ய வேண்டி வந்திருக்கின்றது.

மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றமை குறித்து எதிர்க்கட்சி கேள்வி எழுப்பிய சந்தர்ப்பங்களில் பல்வேறு விதமான பதில்கள் தெரிவிக்கப்பட்டு, ஆளும் தரப்பினர் எம் மீது பல குற்றச்சாட்டுகளையும் முன்வைத்தனர். பொய் சொல்லும் ஏமாற்றும் இந்த அரசின் இலவச சுகாதாரக் கொள்கை இவ்வாறே அமைந்து காணப்படுகின்றது.

நாட்டில் கொலைச் சம்பங்களும் அவ்வாறு காணப்படுகின்றன. கொலை கலாசாரம் தொடர்ந்து வருகின்றது. அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள், குண்டர்கள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களால் துப்பாக்கிச்சூடுகளும் கொலைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் நாடு முழுவதும் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டத் தேவையான எந்த வேலைத்திட்டமும் இந்த அரசிடம் இல்லையா?" - என்று எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

### விமலுக்கும்...

ஆணைக்குழு வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்வதற்காகத் தனக்கு அழைப்பாணை விடுத்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"நான் வீடமைப்பு விவகார அமைச்சராக இருந்தபோது விற்பனை செய்யப்பட்ட சில கடைகள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக என்னை அழைத்துள்ளனர்.

அவர்கள் ஒரு திகதியைக் குறிப்பிட்டு அன்றைய தினம் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக வருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அன்றைய தினம் எனக்கு வேறு ஒரு வழக்கு உள்ளதால் சமூகமளிக்க முடியாது எனத் தெரிவித்து நான் கடிதம் எழுதியுள்ளேன்.

முன்னர் போல் அவர்கள் என்னைச் சிறையில் அடைத்தால் கிடைக்கின்ற நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துவேன். கடந்த தடவை அவர்கள் என்னைச் சிறையில் அடைத்த வேளை இரண்டு நூல்களை எழுதி ஐந்து ஓவியங்களை வரைந்தேன். இம்முறை சிறையில் அடைத்தால் அவ்வாறு நூல்களை எழுதுவேன்." - என்றார்.

### வீடு புகுந்து...

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 22 வயதுடைய இளைஞர் ஒருவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 27 வயதுடைய இளைஞர் ஒருவன் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து படுகாயமடைந்த இளைஞன் களுவத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், துப்பாக்கிதாரிகள் பிஸ்டல் துப்பாக்கியை பயன்படுத்தித் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவருக்கு மறியல் நீடிப்பு

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்கவை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிஷாந்த விக்கிரமசிங்க கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நிஷாந்த விக்ரமசிங்கவுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணைகளை நிறைவு செய்து சாட்சியங்களை எதிர்வரும் 15 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நிஷாந்த விக்கிரமசிங்க, விமானங்கள் கொள்வனவு செய்தமை தொடர்பான விசாரணைகளுக்கு அமைய இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் அண்மையில் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட 63 புறாக்கள் சிக்கின





(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்தி வரப்பட்ட நல்ல இனத்தைச் சேர்ந்த 63 புறாக்கள் இன்று காலை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியில் இருந்து கடல் வழியாகக் கடத்தி வரப்பட்ட புறாக்களே மன்னார் கடலில் வைத்து கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதோடு அதனைக் கடத்தி வந்த மூவரும் படகுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட புறாக்களுடன் மூன்று சந்தேக நபர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

63 புறாக்களின் விலை இலங்கை நாணயத்தில் பல இலட்சம் ரூபா எனக் கணக்கிடப்பட்டுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வாசிப்புக்கு சாவுமணி

மதிப்பு கூட்டப்பட்ட வரி அல்லது பெறுமதி சேர் வரி (வற்) மற்றும் தேசக் கட்டுமான வரி விதிப்புகள் காரணமாக அச்சிடப்பட்ட புத்தகங்களின் விலை இருபது சதவீதம் அதிகரித்துள்ளது என்று தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்தா இந்தீவர, தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கத்தின் ஆண்டு விழாவில் பங்கேற்றபோது இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

"ஒரு புத்தகத்தின் விலை இருபது வீதம் - அதாவது ஐந்தில் ஒரு பங்கு - அதிகரித்துள்ளது. முன்பு, எழுது பொருள் போன்ற அனைத்துப் பொருள்களுக்கும் மதிப்பு கூட்டப்பட்ட வரி பதினைந்து வீதம் இருந்தது. ஆனால் அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கு மதிப்பு கூட்டப்பட்ட வரி இருக்கவில்லை. அது தான் நேரடியாக பூச்சியம் வீதத்திலிருந்து 18 வீதமாக மாறியது. எழுதுபொருள்களுக்கு (Stationery) முன்பு 3 வீத 'வற்' மட்டுமே இருந்தது. அவர்கள் இந்த இரண்டு வகைகளையும் - எழுதுபொருள்களையும் அச்சிட்ட புத்தகங்களையும் - ஒன்றாகக் கணித்து, அணி சேர்த்துக் கலக்கிக் குழப்புகின்றார்கள்." - என்றார் அவர்.

"அச்சிடப்பட்ட புத்தகங்கள் மீதான இந்த வரிவிதிப்புக் குறித்து ஜனாதிபதி செயலகத்துக்கு முறையிட்ட போது, மதிப்பு கூட்டப்பட்ட வரி தொடர்பாக சில பகுப்பாய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும், பின்னர் பதிலை வழங்குவதாகவும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு, எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது." - என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கத்தின் புரவலர் காமினி மொரகொடவும் இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்கு தனது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

"உலகின் எந்த நாட்டிலும் இல்லாத மதிப்பு கூட்டப்பட்ட வரி (வற்) இலங்கையில் எங்கள் புத்தகங்களுக்கு விதிக்கப்படுகிறது. கடந்த 75 ஆண்டுகளாக இலங்கையில் இல்லாத மதிப்பு கூட்டப்பட்ட வரி ஜனவரி 2024 முதல் விதிக்கப்பட்டதால் புத்தக வணிகம் அழிவடைந்துள்ளது. இது எதிர்காலத்தில் தொடர்ந்தால், ஒரு குழந்தை கூட புத்தகம் வாங்க முடியாது." என அவர் விசனம் தெரிவித்தார்.

உண்மைதான். தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள் உட்பட்ட இலத்திரனியல் தொடர்பு சாதனங்களின் வருகையினால் இளம் சமுதாயத்தவர் மத்தியில் வாசிப்பு பழக்கம் அடியோடு அருகி வருவதான கவலை எல்லா மட்டங்களிலும் எழுப்பப்படுகின்றது. நூலகங்களைத் தேடிச் சென்று புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் கணிசமாகக் குறைவடைந்து இருப்பது ஆபத்தான போக்கு என்று சமூக நலன் விரும்பிகள் கவலைப்படுகின்ற சமயத்தில், அச்சிடும் புத்தகங்களுக்கு இருபது வீத வரி விதித்து, அவற்றின் பெறுமதியை மேலும் ஐந்தில் ஒரு பங்கினால் அதிகரிக்க வைப்பது நாட்டில் வாசிப்பு பழக்கத்தை மேலும் பின்னடைவுக்குள் தள்ளச் செய்யும். அது நிச்சயம் பெரும் சமூகப் பாதிப்பாக மாறும்.

இந்த விடயத்தில் அரசு புத்திசாலித்தனமாகவும், வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் விதத்திலும் முடிவுகளை எடுக்க வேண்டும். அது காலத்தின் கட்டாயமாகும்.

# தலவாக்கலை நீர் வழங்கல் சபைக்கு எதிராக கிறேட்வெஸ்டன் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்












**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்று (30) தலவாக்கலை நீர் வழங்கல் சபைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது, தலவாக்கலை கிறேட்வெஸ்டன் ஊடாக ரதெல்லவரை செல்லும் பிரதான வீதியில் ஆங்காங்கே தலவாக்கலை நீர் வழங்கல் சபையினர் புதைக்கப்பட்டிருந்த குடிநீர் குழாய்கள் பழுது பார்ப்பதற்காகத் தோண்டப்பட்டுள்ள நிலையில் அதனை முறையாக மூடி வீதி சீர்த்திருத்தப்படவில்லை.

இதனால் தலவாக்கலை நீர் வழங்கல் சபைக்கு எதிராக அணி திரண்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கிறேட்வெஸ்டன் லூசா தோட்டத்துக்கு அருகாமையில் தலவாக்கலை ரதல்ல வீதியில் அணி திரண்ட மக்கள் பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிறேட்வெஸ்டன் கல்கந்தவத்தை தோட்ட மலை உச்சியில் இருந்து 20 வருடங்களுக்கு முன்னர் தலவாக்கலை நகருக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டது. இந்த குடிதண்ணீர் திட்டமானது கல்கந்தவத்தையில் இருந்து தலவாக்கலைவரை செல்லும் பிரதான வீதியில் பூமிக்கு அடியில் குடி நீர் குழாய்கள் பொருத்தப்பட்டு அதனூடா குடிநீர் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மிக நீண்ட காலமாக இவ்வீதி புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரத்தால் இவ்வீதி காப்பெட் வீதியாக புனரமைக்கப்பட்டது.

ல் இருந்து தலவாக்கலை நீர் வழங்கல் சபை வரை சுமார் 4 கிலோ மீற்றர் தூரம் வரையில் நிலத்துக்கு அடியில் நீர் குழாய்கள் புதைக்கப்பட்டு தண்ணீர் செல்வதால் அதிக மழை காலங்களில் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு பூமிக்கு மேலாக நீர் கசிந்து மேலெழும்புகின்றது. இதனால் காப்பெட் வீதியிக்கு மேலாகத் தண்ணீர் ஓடுகின்றது.

இதனைச் சரி செய்யும் வரும் தலவாக்கலை நீர் வழங்கல் சபையினர் காபட் வீதிகளை தோண்டி நிலத்துக்கு அடியில் பொருத்தப்பட்டிருக்கும் குடிநீர் குழாய்களை சரி செய்கின்றனர். சரி செய்த பின்னர் காப்பெட் வீதியின் மீது மண்ணை மாத்திரம் இட்டு வீதியை மூடிவிட்டு செல்கின்றனர்.

இதனால் அவ்வீதியில் குறிப்பிட்ட சில நாள்களில் ஆங்காங்கே வெடிப்புக்கள் ஏற்படுகின்றன.

நீர் வழங்கல் சபையினர் காப்பெட் வீதியை உடைத்துவிட்டு முறையாகச் சீர் செய்யாமையால் அவ்வீதியில் பயணிக்கும் வாகனங்களை செலுத்த முடியாமல் வாகன சாரதிகள் அவதிப்படுகின்றனர்.

கிறேஸ்வெஸ்டன், ஸ்கல்பா, லூசா, கல்கந்தவத்தை, வங்கிஓயா மற்றும் ரதெல்ல ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் நாளாந்தம் இவ்வீதியை பயன்படுத்தி வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் உட்பட இதர தொழில்துறைகளுக்கு செல்வோரும் இவ்வீதியையே பயன்படுத்துகின்றனர்.

20 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாக காணப்பட்ட வீதி கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் காப்பெட் செய்யப்பட்டுள்ள நிலையில், தலவாக்கலை நீர் வழங்கல் சபையினரின் இவ்வாறான நடவடிக்கைகளால் மீண்டும் வீதி சில இடங்களில் உடைந்து காணப்படுகின்றது.

இதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தலவாக்கலையில் புவியியல் கண்காட்சி





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் தரம் 8 வகுப்பு மாணவர்களால் புவியியல் கண்காட்சி ஒன்று பாடசாலை வளாகத்தில் புவியியல் பாட ஆசிரியை கவிதா தலைமையில் நடைப்பெற்றது.

இதன் போது பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் ப.இளங்கோ, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இதனைப் பார்வையிட்டனர்.






# வளம் மிக்க பிரதேச சபையாக வேலணை மாற்றியமைக்கப்படும் என்கிறார் தவிசாளர்!

## அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுப்பு

யாழ். மாவட்டத்தில் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்களில் வினைத் திறன் மிக்க வளமான சபையாக வேலணை பிரதேச சபையை மாற்றி யமைக்க அமைந்துள்ள ஆட்சி அதி கார காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளஅனைத்துஉறுப்பினர்களும்கட்சி பேதங்கள் பிரிவினைகள் இன்றி உழைக்க வேண்டும் என்று வேலணை பிரதேச சபையின் தவிசாளர் அசோக் குமார் வலியுறுத்தியுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் புதிய ஆட்சிக் காலத்தின் கன்னி அமர்வு தவி சாளர் அசோக்குமார் தலைமையில் சபையின் சபா மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

முன்னதாக, வேலணைப் பிரதேச சபையின் புதிய ஆட்சிக் காலத்தின் மக்கள் பிரதிநிதிகள் வங்களாவடி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளை தொடர்ந்து பிரதேச சபையின் உத்தியோகத்தர் களால் உறுப்பினர்களுக்கு மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டு சபைக்கு அழைத்து வரப்பட்டனர்.

வேலணை பிரதேச சபையின் செயல ளர் பிரசன்னத்துடன் ஆரம்பமான முதலா வது சபை அமர்வில் உரையாற்றிய தவிசாளர்,

எமது வேலணை பிரதேச சபையானது மிகப் பின்தங்கிய ஒரு சபையாக இருக் கின்றது. அந்த நிலை இனியும் தொடரக் கூடாது என்பதே எமது அனைவரது நிலை யாக இருக்கின்றது.

அதனடிப்படையில் எமது சபையை வருமானம் கூடிய சபையாக வினைத் திறன் மிக்கதாக பரிணமிக்கச் செய்வது அவசியமாகும்.

அதேபோன்று கடந்த சபையில் நாட்டின் காலத்தில் காலச் சூழலால் பொருளாதார நெருக்கடி போன்ற ஏதுக் களால் பல திட்டங்கள் தடைப்பட்டு போயின.

அதனடிப்படையில் கடந்த காலத் தில் முன்னெடுக்காது இருந்த திட்டங் களை நாம் கட்சி பேதங்கள் இன்றி முன்னெடுப்பது அவசியம்.

அதேபோன்று ஆளணி பற்றாக் குறையை நிவர்த்தி செய்யப்படுவதுடன்,

அவற்றை நிறைவேற்றுவதற்கு பேத மின்றி ஆதரவுகள் இருக்க வேண்டும்.

அத்துடன் வங்களாவடி கடைத் தொகுதி யின் மேற்றளத்தைக் கட்டுதல், பொது விளையாடு மைதானம் அமைத் தல், அதை சிறந்த பொதிமுறையுடன் முன்னெடுத்துச் செல்லல், சோலைவரித் திட்டத்தை வேலணையின் அனைத்து கிராமங்களிலும் முன்னெடுத்தல், சுற்றுலா விவசாய நடவடிக்கைகளை விரிவாக்கல், வீதிச் சுற்று வட்டம் அமைத் தல், முக்கியஸ்தர்களின் நினைவு சிலை கள் அமைத்தல், வேலணை நுழை வாயில் வளைவு அமைத்தல் உள்ளிட்ட திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெ டுத்து நிறைவுசெய்து கொள்ள இந்த ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படும் என நம்பிக்கையுடன் முயற்சிக் கின்றேன்.– என்றார்.

இதன் பின்னர் உறுப்பினர்களது அறிமுக உரை இடம்பெற்றது.

இதன்போது உறுப்பினர்களால் கடந்த சபைகளில் முன்னெடுக்கப் பட்டதும், விடுபட்டதுமான திட்டங்கள் போன்றவற்றை சுட்டிக்காட்டி அவற்றை முன்னெடுப்பதில் இருந்த தவறுகள், அவற்றை முன்னெடுப்பதற்கன பொறி முறைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட் டது.

குறிப்பாக பிரதேச சபையின் உப சபைகளின் கட்டமைப்பும் வளப்படுத் தப்பட்டு மக்களுக்கான சேவைகள் துரி தப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத் தப்பட்டது.

அத்துடன் நயினாதீவில் திண்மக் கழிவு அகற்றலை பாரபட்சமற்ற வகை யில் முன்னெடுக்க வேண்டும் என்ப துடன் வீதி திருத்தப்படு போக்குவரத்து சேவை சீர்செய்யப்பட வேண்டும் எனவும் சுடிக்காட்டப்பட்டது.

இந்த நிலையில் குறித்த வீதிக்கு இவ்வாண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று சுடிக்காட்டப்பட்டது.

குறிப்பாக குடிதண்ணீர், கட்டாக் காலிகளைக் கட்டுப்படுத்தல், திண்மக் கழிவகற்தல், சுகாதார மேம்பாடு, குறி காட்டுவான் பயணிகள் போக்குவரத்து சீரமைப்பு, விவசாயம், வருவாயை அதி கரிக்க சந்தைகள் உள்ளிட வருமான மீட்டும் வழிமுறைகளை பயன்படுத்தல், உள்ளக வீதி சீரமைப்பு போன்றவற்றை குறிப்பிட்டு அவற்றுக்கான தீர்வுகளை வலியுறுத்தப்பட்டது .

அறிமுக உரையின் பின்னர் நியதிக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் நிய மிக்கப்பட்டனர்.





# திருகோணமலை சிவன் தேர்த்திருவிழா!

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை விஸ்வநாத சுவாமி (சிவன்) ஆலய வருடார்ந்த மஹோற்ஷவத்தின் தேர்த்திருவிழா இன்று (01) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது எம்பெருமான் விசேட பூசை ஆராதனைகளுடன் பத்தர்கள் புடைசூழ தேரில் எழுந்தருளினார். சிறுமிகளின் நடன நிகழ்வுகளும் இடம் பெற்றன.







### மன்னார் நகரில் உடைக்கப்பட்ட

# தந்தை செல்வாவின் உருவச்சிலை புனரமைக்கப்பட்டுத் திறந்து வைப்பு!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் நகரில் அமைந்திருந்த தந்தை செல்வாவின் உருவச்சிலை கடந்த வாரம் இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்ட நிலையில் இந்த உருவச்சிலை இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு இன்று (01) செவ்வாய்க்கிழமை (1) காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மத தலைவர்கள், இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை தலைவர் – முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் உறுப்பினர்கள், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் மதத் தலைவர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



மன்னார் நகர மத்தியில் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலை கடந்த புதன்கிழமை (25) அதிகாலை இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் குறித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை முக்கியஸ்தர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில், சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தந்தை செல்வாவின் உருவச்சிலையில் காணப்பட்ட அவரது தலை முழுமையாக அகற்றப்பட்ட நிலையில் அவரது சிலைக்கு அருகில் இருந்து தலைப்பாகம் மீட்கப்பட்டது.

சிலை உடைப்பு சம்பவத்தை தொடர்ந்து மன்னார் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைவாக குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.












# புத்தளத்தில் சுவசேவை நிலையத்தின் கற்றல், சுகாதாரம் பொருள்கள் வழங்கல்

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

ஆஸ்திரேலியாவின் தொண்டு நிறுவனமான சுவ சேவை நிலையத்தின் புத்தளம் கிளையின் ஊடாக கற்றல் உபகரணங்கள் மற்றும் சுகாதாரம் சார்ந்த பொருள்கள் வழங்கும் நிகழ்வு புத்தளத்தில் இடம்பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட சுமார் 30 பெண் பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்களும் மற்றும் சுகாதாரம் சார்ந்த பொருளகள் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் புத்தளம் மாநகர சபை உறுப்பினர் ரணீஸ் பதுர்தீன், மாநகர சபை உறுப்பினர் ஷதா பாயிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# மன்னார் நகர முதல்வர் அரச அதிபருடன் சந்திப்பு



**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் இன்று செவ்வாய் (01) காலை மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு விஜயம் செய்து மன்னார் மாவட்ட அரச அதிபர் க. கனகேஸ்வரனுடன் விசேட சந்திப்பை மேற்கொண்டார்.

இதன் போது மன்னார் நகர சபை பிரிவில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், மன்னார் நகர சபை பிரிவில் கண்டறியப்பட்ட குறைகள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப் பட்டது.

இந்தச் சந்திப்பின் போது மன்னார் நகர சபைச் செயலாளர் லோகேஸ்வரன் மற்றும் நகரசபை உறுப்பினர் செபமாலை ஆரோக்கியநாதன் பிகிறாடோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தீயணைப்புப் பயிற்சிச் செயலமர்வு

**(பாறுக் ஷிஹான், ஆதம்)**

தீ விபத்து மற்றும் அது தொடர்பான அனர்த்த நிலைமைகளின்போது தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சுகாதார உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கான பயிற்சி நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது,

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் வழிகாட்டலில் பிராந்திய பொது சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அஜ்வத் ஒருங்கிணைப்பில் இந்தப் பயிற்சிச் செயலமர்வு இடம்பெற்றது.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் கல்முனை பிராந்தியத்தில் உள்ள வைத்தியசாலைகள் உள்ளிட்ட சுகாதார நிறுவனங்களில் இருந்து குறித்த பயிற்சிச் செயலமர்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது வைத்தியசாலை உள்ளிட்ட சுகாதார நிறுவனங்களில் தீ விபத்து மற்றும் அது தொடர்பான அனர்த்தங்கள் இடம்பெறும் போது அதனைக் கட்டுப்படுத்துவது, உயிர் உடமைகளை பாதுகாப்பது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து செய்முறைப் பயிற்சிகளும் இடம்பெற்றன.

பிராந்திய தர முகாமைத்துவ மற்றும் சுற்றுச்சூழல் தொழில்சார் உணவுப் பாதுகாப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத், கல்முனை மாநகர சபை தீயணைப்பு பிரிவு உத்தியோகத்தர் ஏ.ஆர்.கே.மிஹார் ஆகியோர் இந்த நிகழ்வில் வளவாளர்களாகக் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.













# சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளருக்குப் பாராட்டு!

( வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை 2015 ஓ. எல். பௌண்டஷன் அமைப்பினர், சம்மாந்துறை வலயத்தில் ஆற்றிவரும் அரிய அர்ப்பணிப்பான சேவைக்காக சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமாரை நேரில் சென்று பாராட்டிக் கௌரவித்தனர்.

சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் தனது கடமையைப் பொறுப்பேற்றுச் சிறந்த கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக இன, மத, பேதம் கடந்து ஒரு வருடம் பூர்த்தி செய்து தொடர்ச்சியாக பயணித்துக் கொண்டிருக்கின்றார். இந்த நிலையில் அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினருமான அமீர் அப்னான் தலைமையில் நடைபெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமாரின் கடந்த கால கல்வி நிர்வாக செயற்பாடுகளுக்கு வாழ்த்துத் தெரிவித்ததுடன் மாணவர்களின் எதிர்கால கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய செயற்றிட்டங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

# கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்துப் பாதிப்பு!





(பாறுக் ஷிஹான்)

கட்டாக்காலி மாடுகள் தினமும் ஆக்கிரமிப்பதால் பொதுப்போக்குவரத்துக்கு சிரமம் ஏற்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அம்பாறைமாவட்டம்கல்முனைமாநகர சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் பகல் இரவு பாராது ஆக்கிரமித்துள்ள கட்டாக்காலி மாடுகள் தினமும் பொதுப் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தும் வகையில் நடமாடி வருகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள அரச தனியார் நிறுவனங்களுக்கு முன்பாக தினமும் சஞ்சாரம் செய்வதுடன் அந்தப் பகுதிகளைச் சுகாதாரச் சீர்கேடாக மாற்றுகின்றன என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனைத் தலைமையக பொலிஸ் நிலையம், கல்முனை மாநகர சபை, கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை, கல்முனை பிரதான பஸ் தரிப்பிடம், இலங்கை மின்சார சபை, கல்முனை பிரதேச செயலகம், வங்கிகள், உள்ளிட்ட பகுதிகளில் இரவு வேளையில் கட்டாக்காலி மாடுகள் நாய்கள் நடமாடுவதுடன் சேதங்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

வீதிகளில் இரவு வேளையில் நடமாடித்திரியும் சுமார் 25 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் மாலை நேரம் மற்றும் இரவு நேரங்களில் கூட்டம் கூட்டமாக அலைந்து திரிகின்றது. இதனால் வீதிப் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்து வருவதுடன் வீதி விபத்துக்களும் இடம் பெறுவதற்குக் காரணமாக அமைகின்றது

இவ்வாறான கட்டாக்காலி மாடுகளால் ஏற்படும் போக்குவரத்து இடைஞ்சல், விபத்துக்களை குறைக்கும் வகையிலும் கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபை மற்றும் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

மாநகர சபை கடந்த காலங்களிவ் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்பட்ட கட்டக்காலி மாடுகளைப் பொலிஸாருடன் இணைந்து பிடித்ததை போன்று எதிர்காலத்தில் பிடித்து கட்டாக்காலி மாடுகளால் அன்றாடம் ஏற்படுகின்ற வீதி விபத்துக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.




# திருநீலகக்க நாயனார் குருபூசை நிகழ்வு!

(பழுவூரான்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசனை, வழி காட்டலுக்கு அமைவாக, இருதயபுரம் பாலமுருகன் ஆலயம் பாலமுருகன் அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டில் சிவதொண்டர் திருக்கூட்டம் உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் இணைந்து திருநீலநக்க நாயனார் குருபூசையையும் ஆன்மீக எழுச்சி ஊர்வலத்தையும் நடத்தின.

அத்துடன் மாணவர்களுக்கு இடையில் கலாசார போட்டி நடத்தப்பட்டது.

பாலமுருகன் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர் க.ருத்ரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஸ்ண மிசன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தஜி மகராஜ், மட்டக்களப்பு பிரம்ம குமாரிகள் இராஜஜோக நிலைய பொருப்பதிகாரி பிரமகுமார் சுரேந்திரன், சிரேஷ்ட விரிவுரையாளர் ச.ஜெயராஜா, மட்டக்களப்பு மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகம், சிவதொண்டர் திருக்கூட்டத்தின் தலைவர் சிவதொண்டர் க.கமல்ராஜ், மாவட்ட இணைப்பாளர் சிவதொண்டர் எஸ்.சுதர்சன், மட்டக்களப்பு இந்து மகளீர் மன்றத்தின் தலைவி திருமதி.பா.காயத்ரி, சமய சமுக பற்றாளர் சிவதொண்டர் எஸ். சிவபாதசுந்தரம், முனைவர் து.பிரசாந்தன், மண்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசாச அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.து.சர்மிளா, பாலமுருகன் ஆலய பரிபாலன சபையினர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அத்தோடு சிவதொண்டர் திருக்கூடத்தின் 318 ஆவது பணியாகவும் இதுவரை 54500 தாய்த்தமிழ் உறவுகளுக்கு சிவ சின்னமான உருத்திராக்கமும் அணிவிக்கப்பட்டுள்ளது.



# யாழ். இந்தியத் துணைத் தூதுவருடன் இன்று செல்வம் தலைமையில் ரெலோ குழு சந்திப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைக்கான இந்திய துணைத் தூதர் சாய் முரளி யை தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) சார்பாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான குழுவினர் இன்று (01) செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.




கலந்துரையாடலில் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், மாந்தை மேற்கு பிரதே சபை தவிசாளர் ஞானப் பிரகாசம் பிரேம் குமார், வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், மன்னார் நகர சபை உறுப்பினர் செபமாலை ஆரோக்கியநாதன் பிகிறாடோ, மன்னார் பிரதேச சபை உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல், பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல், காங்கேசன் துறையில் கப்பல் கட்டுவதற்குச் சிறிய நிலையம் ஒன்றை அமைத்தல், மன்னாரில் நவீன முறையில் விளையாட்டு மைதானம் அமைத்தல், மாந்தை மேற்கில் உள்ளக விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்தல், மன்னார் பிரதேச சபை பிரிவில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த தேவையான உதவிகள் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது தாங்கள் முன் வைத்த கோரிக்கைகள் மற்றும் வேண்டுகோளை இலங்கைக்கான இந்திய துணை தூதர் சாய் முரளி ஏற்றுக் கொண்டுள்ளார் என்று மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.



# கதிர்காமத்தில் யானைகளது உதவியுடன் இன்று பாரம்பரிய பந்தலிடும் நிகழ்வுகள்

( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமம் கந்தன் ஆலயத்தில் கதிர்காமம் பெரிய கோவிலில் வருடமொருமுறை ஆதிவாசி வேடுவகுல மக்களால் பச்சைப் பந்தலிடும் வைபவம் இடம்பெறுவது வழமை.

இந்த நிகழ்வு இன்று (01) செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

அங்கு பாரம்பரிய நிகழ்வுகளான யானைகள் மூலம் பந்தலுக்கான மரம்செடி கொடிகள் மாணிக்க கங்கையூடாக சுத்த மாக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டன.

ஆலய நிலமே நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

யானைகள் உதவியுடன் பாரம்பரிய வேடுவகுலமக்கள் சகிதம் பந்தல் அமைக் கப்பட்டது.







# ஓமன் சென்ற எண்ணெய் கப்பலில் திடீர் தீ: மீட்புப் பணிக்கு விரைந்த இந்திய கடற்படை

ஓமன் சென்ற எண்ணெய் கப்பலில் திடீர் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, மீட்புப் பணிக்கு இந்திய கடற்படை விரைந்துள்ளது.

குஜராத் மாநிலம் கண்ட்லா துறைமுகத்தில் இருந்து ஓமன் ஷினாஸ் துறைமுகம் நோக்கி 'எம்.டி. யி செங் 6' என்ற எண்ணெய் கப்பல் சென்று கொண்டிருந்தது. பலாவு நாட்டு கொடியுடன் சென்ற இந்த கப்பலில் இந்திய மாலுமிகள் 14 பேர் இருந்தனர்.

இந்த கப்பலின் இன்ஜின் அறையில் திடீரென தீப்பற்றியது. இது குறித்து ஓமன் வளைகுடாவில்



இருந்த, இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். தபார் போர்க் கப்பலுக்கு நேற்று முன்தினம் தகவல் தெரிவிக்கப்பட்டு, உதவி கோரப்பட்டது.

இதையடுத்து ஐ.என்.எஸ். தபாரில் இருந்து தீயணைப்பு சாதனங்களுடன் இந்திய கடற்படை வீரர்கள் படகு மற்றும் ஹெலிக்கொப்டரில் விரைந்து சென்று தீயை அணைத்து வருகின்றனர்

# பா.ஜ.க, தி.மு.கவை எதிர்க்கும் கட்சிகளுடன் கூட்டணியா?

## பிரேமலதா விளக்கம்

பா.ஜ.க மற்றும் தி.மு.கவை எதிர்க்கும் கட்சிகளுடன் கூட்டணியா? என்ற கேள்விக்கு தே.மு.தி.க.பொதுச் செயலாளர் பிரேமலதா விளக்கமளித்துள்ளார்.

மா விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி கிருஷ்ணகிரியில் தே.மு.தி.க. சார்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற, அக்கட்சியின்பொதுச் செயலாளர் பிரேமலதா, பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"அ.தி.மு.கவுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி கூறுவதும், மத்திய அமைச்சர் அமித்ஷா தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமையும் என்று கூறுவதும் அவரவர் கருத்து.

தே.மு.திகவைப் பொறுத்தவரை கூட்டணி ஆட்சியை வரவேற்கிறோம்.



தேர்தல் கூட்டணி குறித்து ஜனவரி 9 ஆம் திகதி அறிவிப்போம். பா.ஜ.க, தி.மு.கவை எதிர்க்கும் கட்சிகளை இணைத்து கூட்டணி அமைக்கப்படுமா என்பதை காலம்தான் முடிவு செய்யும்.

திருப்புவனத்தில் அஜித்குமார் என்ற இளைஞர் பொலிஸ் விசாரணையின்போது உயிரிழந்துள்ளார். மாரடைப்பால் அவர் உயிரிழந்துள்ளார் என முதல்வர் ஸ்டாலின் கூறுவது வருத்தமளிக்கிறது. பொலிஸ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமே தவிர, ஏவல் துறையாக இருக்கக் கூடாது." என்றார்.

# முதல்வர் வேட்பாளர் யார் என்பது குறித்து அமித் ஷா, பழனிசாமி முடிவு செய்வார்கள்

## எல்.முருகன் கருத்து

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி குறித்தும், முதல்வர் வேட்பாளர் யார் என்பது குறித்தும் மத்திய அமைச்சர் அமித்ஷாவும், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியும் பேசி முடிவெடுப்பார்கள் என்று மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் முப்படை ஓய்வூதியர்களுக்கான மாபெரும் குறைதீர் கூட்டத்தை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் நேற்று தொடங்கிவைத்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தி.மு.கவினர் தோல்வி பயத்துடன் ஆட்சி நடத்தி வருகின்றனர். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றி மூலம் தி.மு.கவை வீட்டுக்கு அனுப்புவோம். முதல்வர் செயல்படாததன் விளைவாக லோக்கப் மரணம் நடந்துள்ளது.

பொலிஸ் நிலையத்துக்கு செல்லவே மக்கள் அச்சப்படுகிறார்கள். முதல்வரின் உத்தரவை எந்த அதிகாரியும் பின்பற்றுவதில்லை. அதிகாரி



கள் ஆட்சிதான் தமிழகத்தில் நடக்கிறது. அவர் சரியாக செயல்படவில்லை. திமுகவுடனான கூட்டணிக்காக தமிழக மக்களின் நலனை கூட்டணிக் கட்சிகள் அடகு வைத்து விட்டன.

துறை அமைச்சர் என்ற முறையில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் ஸ்டுடியோவை பார்வையிட்டேன். அவரிடம் அரசியல் எதுவும் பேசவில்லை. தமிழகத்தில் அ.தி.மு.க. தலைமையில்தான் தேசிய ஜனநாயக கூட்டணி இயங்கும் என்று மத்திய அமைச்சர் அமித்ஷா கூறிவிட்டார். தமிழகத்தில் கூட்டணி ஆட்சி குறித்தும், முதல்வர் வேட்பாளர் குறித்தும் அமித்ஷாவும், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியும் பேசி முடிவெடுப்பார்கள். இதில் நான் கருத்து கூற முடியாது.

கூட்டணியில் குழப்பம் இல்லை. எங்கள் கூட்டணிதான் 2026 இல் வெற்றி பெறும்." என்றார்.





# ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் உக்ரைனுக்கு திடீர் விஜயம்

உக்ரைனுக்கு திடீர் விஜயமாக ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் ஜோஹன் வடேபுல் சென்றுள்ளார். உக்ரைனுக்கான தமது ஆதரவு தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை அவர் இந்த திடீர் பயணத்தை மேற்கொண்டார். உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி மற்றும் உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரி சிபிஹாவை வதேபுல் சந்திக்கவிருந்தார்.

உக்ரைன் "நவீன வான் பாதுகாப்பு மற்றும் பிற ஆயுதங்களுடன், மனிதாபிமான மற்றும் பொருளாதார உதவியுடன் வெற்றிகரமாகத் தன்னைத் தற்காத்துக் கொள்ள ஜெர்மனி தொடர்ந்து உதவும்" என்று வதேபுல் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

அமெரிக்காவிற்குப் பிறகு உக்ரைனின் இரண்டாவது பெரிய இராணுவ ஆதரவாளராக ஜெர்மனி இருந்து வருகிறது.

இருப்பினும்,ஜெலென்ஸ்கியின் கோரிக்கைக்கமைய உக்ரைனுக்கு சக்திவாய்ந்த ஜெர்மன் மற்றும் சுவீடிஷ் தயாரிப்பான டாரஸ் நீண்ட தூர ஏவுகணைகளை வழங்க வழங்க பெர்லின் மறுத்துவிட்டது. அத்தகைய நடவடிக்கை கிரெம்ளினை கோபப்படுத்தக்கூடும் மற்றும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவின் மிகப்பெரிய மோதலில் நேட்டோவை இழுக்கக்கூடும் என்ற அச்சம் இதற்குக் காரணம்.

அதற்கு பதிலாக, மே மாதத்தில் ஜெர்மன் சான்சலர் பிரீட்ரிக் மெர்ஸ், உக்ரைன் அதன் சொந்த நீண்ட தூர ஏவுகணை அமைப்புகளை உருவாக்க உதவுவதாக உறுதியளித்தார், அவை அவற்றின் பயன்பாடு மற்றும் இலக்குகளில் மேற்கத்திய நாடுகள் விதித்த எந்த வரம்புகளும் இல்லாமல் இருக்கும்.

வாடெபுல் தனது கியேவ் பயணத்தில் ஜெர்மன் பாதுகாப்புத் துறை பிரதிநிதிகளுடன் இருந்தார்.





# சூடானில் தங்கச் சுரங்கம் இடிந்து 11 தொழிலாளர்கள் உயிரிழப்பு

சூடானில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 11 தொழிலாளர்கள் பலியான நிகழ்வு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இங்குள்ள கிழக்கு நைல் நதி மாகாணத்தில் உள்ள கெர்ஷ் அல்பீல் தங்கச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் ஏராளமான தொழிலாளர்கள் பணியில் இருந்தனர். அப்போது அந்தச் சுரங்கம் திடீரென இடிந்து விழுந்தது. அங்கு பணியில் இருந்த தொழிலாளர்கள் 11 பேர் பலியானார்கள். மேலும் 7 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து சம்பவம் சூடானில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. அங்கு தரமற்ற பாதுகாப்பு நடை முறைகளால் அடிக்கடி விபத்துகள் நடந்து வருவதாக மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டி வருகின் றனர்.

இதைத்தொடர்ந்து பாதுகாப்பு காரணங்களுக்காக சுரங்கப் பணியை நிறுவனம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. சூடானில் மோசமான பாதுகாப்பு காரணமாக இத்தகைய விபத்துகள் அடிக்கடி ஏற்படுகின்றன.

கடந்த 2021ஆம் ஆண்டு 38 தொழிலாளர்களும், 2023ஆம் ஆண்டு 14 தொழிலாளர்களும் இதுபோன்ற சம்பவங்களில் பலியாகியுள்ளனர்.

அதிகாரபூர்வ தரவுகளின்படி, சூடானின் தங்கத்தில் கிட்டத்தட்ட 80 சதவீதத்தை சுமார் 1.5 மில்லியன் சுரங்கத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கிறார்கள். இது 2024இல் மொத்தம் 64 தொன்களாக இருந்தது.





பக்கங்கள் - 05

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை | 01/07/2025

## புதிய குடியிருப்பு அனுமதியை அறிமுகம் செய்கின்றது கனடா

கனடா தன் பொருளாதார புலம்பெயர்தல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, 2025 ஆம் ஆண்டில், பொருளாதார இயக்கப் பாதைகள் முன்னோடித் திட்டத்தின்

04▶





# அமெரிக்கா மீது கனடா வரி விதித்தால் வர்த்தக பேச்சு நிறுத்தப்படும்: ட்ரம்ப்

**அமெரிக்கா மீது கனடா வரி விதித்தால், உடனே வர்த்தக பேச்சுவார்த்தைகளை நிறுத்துவதாக மிரட்டுகிறார் ட்ரம்ப்.**

**கனடாவில் இயங்கும் அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்கள் மீது டிஜிட்டல் சேவை வரி தொடரும் என கனடா தரப்பு தெரிவித்திருந்தது.**

**உடனே, டிஜிட்டல் சேவை வரி விதித்தால், கனடாவுடன் வர்த்தக பேச்சுவார்த்தைகளை நிறுத்துவதாக அறிவித்த ட்ரம்ப், கூடுதல் வரிகள் விதிப்பேன் என மிரட்டினார்.**

அதைத் தொடர்ந்து, டிஜிட்டல் சேவை வரி விதிக்கும் திட்டத்தை கைவிடுவதாக கனடா அறிவித்தது.

பெரிய அளவிலான பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக கனடா அரசு டிஜிட்டல் சேவை வரி விதிப்பை கைவிடுவதாக கனடா பிரதமர் மார்க் கார்னி நேற்று தெரிவித்தார்.

ஆக, மீண்டும் கனடாவுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை அமெரிக்கா துவங்கியுள்ளது.


என்றாலும், கனடாவை கேலி பேசுவதையும் அவமதிப்பதையும் விடவில்லை அமெரிக்கா.

வெள்ளை மாளிகை ஊடகச் செயலரான கரோலின், கனடா டிஜிட்டல் சேவை வரி விதிக்க முயற்சித்ததன் மூலம் தவறு செய்துவிட்டதாகவும், ஞாயிற்றுக்கிழமை ட்ரம்பை தொலைபேசியில் அழைத்த கார்னி வரிவிதிப்பைக் கைவிடுவதாகத் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் நிறுத்தாமல், ட்ரம்ப் கொடுத்த அழுத்தம் காரணமாக, மார்க் கார்னி வளைந்துகொடுத்து விட்டதாகவும் கூறியுள்ளது வெள்ளை மாளிகை தரப்பு.

ஜஸ்டின் ட்ரூடோ கனடாவின் பிரதமராக இருந்தபோதும் அமெரிக்கா கனடாவை கேலி பேசி வந்தது. இப்போது கனடாவில் ஆட்சி மாறினாலும் அவமதிப்பு மட்டும் மாறவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது

# இலங்கையின் பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச முயற்சிகளுக்கு கனடா ஆதரவு



தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச முயற்சிகளை கனடா தொடர்ந்து ஆதரிக்கும் என கனேடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தை கனடாவில் செயற்படும் தமிழ் அமைப்பு ஒன்றுக்கு எழுத்திய கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், தமிழ் இனப்படுகொலையின் எதிரொலியாக தமிழ் கனேடியர்கள் சுமக்கும் வலியை புரிந்து கொள்வதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்கள் உட்பட அனைத்து சமூகங்களையும் கனடா ஆதரிப்பதாகவும் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அளித்து வரும் பங்களிப்புகளை கனடிய அரசாங்கம் மதிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் பதவி வகித்த இரண்டாவது இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த அமைச்சராக அவரது மரபு குறித்தும் நான் பெருமைப்படுகிறேன் என பிரதமர் சட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, தமிழர்களுக்கு

04▶


Happy
Canada
DAY
கனடா தின வாழ்த்துகள்
JULY
01
A ONE MEDIA NETWORK (PVT) LTD
a one
முரசு



# இன்று கனடா தினம்!

ஜூலை 1, கனடா தினமாக கொண்டாடப்படுகின்றது. கனடா தனது சொந்த நாடாக மாறுவதற்கு முன்பு ஒரு காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு சொந்தமான பிரதேசமாக இருந்தது.

ஜூலை 1, 1867 அன்று, கனடா என்று அழைக்கப்படும் ஒரு டொமினியனில் 3 காலனிகளை ஒன்றிணைக்கும் ஒரு முக்கியமான சட்டத்தில் கையெழுத்திட்டதன் மூலம் நாடு சுதந்திரத்திற்கான முதல் படியை எடுத்தது.

கனடா முழுமையாக சுதந்திரமாகி இன்றைய நாட்டிற்கு வளர 1867 ஆம் ஆண்டில் அந்த அதிர்ஷ்டமான நாளுக்குப் பிறகு இன்னும் பல ஆண்டுகள் ஆனாலும், கனடா தினம் நாட்டின் தேசிய விடுமுறையாக கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 ஆம் தேதி நடைபெறும், கனடா தினம் அதன் தனி மாகாணங்கள் ஒன்றிணைந்து கனடாவின் நாடாக மாறிய ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

இந்த நாள் சில நேரங்களில் கனடாவின் பிறந்த நாள் என்று குறிப்பிடப்படுகிறது, ஆனால் இது கனடாவின் முழு மைல்கல்லுகளில் ஒன்றை மட்டுமே முழு சுதந்திரத்தை அடைந்தது.

இப்போது, கனடியன் அனைத்தையும் கொண்டாடும் ஒரு கொண்டாட்டத்தை இது குறிக்கிறது, நீண்ட வார இறுதியில் நண்பர்களும் குடும்பத்தினரும் பார்பெக்யூக்கள், பட்டாசுகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் அணி வகுப்புகளுக்கு கூடிவருகிறார்கள்.

கனடா தினம் 150 ஆண்டுகளுக்கும் மேலாக கொண்டாடப்படுகிறது. ஜூலை 1, 1867 இல், நோவா ஸ்கோடியா, நியூ பிரன்சுவிக் மற்றும் கனடா மாகாணம் - இப்போது ஒன்ராறியோ மற்றும் கியூபெக் - பிரிட்டிஷ் வட அமெரிக்கா சட்டத்தில் கையெழுத்திட்டன, பின்னர் அரசியலமைப்புச் சட்டத்தின் பெயர் மாற்றப்பட்டன.

ஏறக்குறைய ஒரு வருடம் கழித்து, ஜூன் 20, 1868 அன்று, கவர்னர் ஜெனரல் லார்ட் மாங்க், கனடாவில் உள்ள அனைத்து ஹெர் மெஜஸ்டியின் அனைத்து பாடங்களையும் ஜூலை 1 அன்று கனடா தினத்தைக் கொண்டாடுமாறு ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.

கனடா தினம் 1879 ஆம் ஆண்டில் கூட்டாட்சி விடுமுறையாக நிறுவப்படுவதற்கு இன்னும் 11 ஆண்டுகள் ஆனது. கூட்டமைப்பின் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த விடுமுறை 1982 ஆம் ஆண்டு வரை கனடா தினமாக மறுபெயரிடப்பட்டது வரை டொமினியன் தினம் என்று அழைக்கப்பட்டது.

அசல் பெயர் இங்கிலாந்தின் சுயாதீன ஆதிக்கமாக கனடாவின் நிலையிலிருந்து உருவாகிறது; உண்மையில், 1982 ஆம் ஆண்டு கனடா சட்டம் வரை கனடா முற்றிலும் சுதந்திரமான நாடாக மாறியது.





# கனடாவில் மானை கொன்றவருக்கு 4,500 டொலர் அபராதம் விதிப்பு

கனடாவின் ஒண்டாரியோ மாகாணத்தில் சட்டவிரோதமான முறையில் மானை கொன்ற நபர் ஒருவருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த நபருக்கு 4500 டொலர் அபராதம் மற்றும் வேட்டையாடும் உரிமை நீக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக வேட்டையாடி பின்னர் மானை விட்டுவிட்டதற்காக, ஸ்டர்ஜென் பால்ஸ் Sturgeon Falls நகரைச் சேர்ந்த ரொபர்ட் திபெல்ட் Robert Thibeault என்பவருக்கு கடுமையான அபராதமும் வேட்டையாடும் உரிமை இடைநீக்கமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் 2023 அக்டோபரில், ஒன்றாரியோ மற்றும் கியூபெக் மாகாண எல்லைக்கு அருகிலுள்ள ஸ்டெர்ஜென் Sargeant நகரப் பகுதியில் இடம்பெற்றது.

அனாமதேய தகவல் ஒன்றைத் தொடர்ந்து, Ontario இயற்கை வள அமைச்சின் பாதுகாப்பு அலுவலர்கள் (Conservation Officers) சம்பவ இடத்துக்கு சென்று, கொல்லப்பட்டு விட்டுவைக் கப்பட்ட ஒரு பெண் மானை கண்டுபிடித்தனர்.



## புதிய குடியிருப்பு...

(C01 தொடர்ச்சி)

அடிப்படையிலான, புதிய குடியிருப்பு அனுமதி வழிமுறை ஒன்றை அறிமுகம் செய்ய இருக்கிறது.

வழிமுறை இடம்பெயர்ந்த தனிநபர்கள் மற்றும் திறமையான அகதிகள் நாட்டில் வாழவும் வேலை செய்யவும் ஒரு நிலையான பாதையை வழங்குவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

இந்த அறிவிப்பு, 2025-2026 இற்கான கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.


இந்த திட்டம் குறித்த முழுமையான விவரங்கள் வெளியாகவில்லை என்றாலும், இந்த ஆண்டு, அதாவது, 2025ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 31ஆம் திகதி, பொருளாதார இயக்கப் பாதைகள் முன்னோடித் திட்டம் காலாவதியாகும் முன் இந்த புதிய திட்டம் துவங்கும் என கனடா அரசு தெரிவித்துள்ளது.

## இலங்கையின்...

(C01 தொடர்ச்சி)

எதிரான இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலை நோக்கிய உண்மை மற்றும் நீதிக்கான அழுத்தத்திற்கு சுயாதீனமான சர்வதேச முயற்சிகளை கனடா தொடர்ந்து ஆதரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டினரின் வெறுப்பை எதிர்க்கிறோம் அந்த வகையில், வணிக மற்றும் சமூகத் தலைவர்களாக இருந்து, எங்கள் சமூகத்தின் துடிப்பை மேம்படுத்துவது வரை கனடா வாழ் ஈழத் தமிழர்கள் நாட்டிற்கு செய்யும் மகத்தான பங்களிப்புகளை ஏற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


கனடா தின
வாழ்த்துகள்
HAPPY
Canada
DAY
JULY 01
tamil one TV HD
Voice of Tamil Canadians